# காஞ்சிபுரம் மாவட்டம்

## முதலாம் திருப்புதல் தேர்வு - 2024

### 11 - ஆம் வகுப்பு கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். 20 X 1 = 20

| | | |
|---|---|---|
| 1 | ஈ | நடப்புச் சொத்து |
| 2 | அ | வங்கி |
| 3 | அ | அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் |
| 4 | அ | அனைத்து சரக்குகளின் கடன் கொள்முதல் |
| 5 | ஈ | விதிப்பிழை |
| 6 | அ | இறுதியில் |
| 7 | ஆ | அடுத்த ஆண்டு |
| 8 | இ | இருப்புக் கட்டுதல் |
| 9 | ஈ | அமைப்பு நிரலாளர்கள் |
| 10 | அ | தபால் செலவு மற்றும் பயணச் செலவு |
| 11 | ஆ | முதல் கணக்கில் வரவு வைக்கப்படும் |
| 12 | ஆ | பணியாளர் |
| 13 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் |
| 14 | ஈ | (அ), (ஆ) மற்றும் (இ) |
| 15 | இ | அனைத்து ரொக்கப் பெறுதல்கள் மற்றும் அனைத்து ரொக்கச் செலுத்தல்கள் |
| 16 | ஆ | நீள்பயன் வருவாயினச் செலவு |
| 17 | அ | வணிக தனித்தன்மை கருத்து |
| 18 | ஆ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 19 | அ | நிதி நிலையினை |
| 20 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் |

## பகுதி - ஆ

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 2 = 14

21. இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |



22. பேரேடு என்றால் என்ன?

- பேரேடு என்பது ஆள்சார், சொத்துகள், பொறுப்புகள், செலவுகள் மற்றும் வருமானம் ஆகிய கணக்குகளில் இடம் பெற்றுள்ள மற்றும் ஒரு குறிப்பிட்டகாலத்திற்குரிய தொடர்புடைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்று திரட்டி அதன் இறுதி விளைவைக் காட்டக் கூடிய ஒரு தொகுப்பு அறிக்கையாகும்.

23.

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{1{,}000{,}000 - 5{,}000}{5} = \frac{95{,}000}{5}$$

ஆண்டு தேய்மானத் தொகை = ₹. 19,000

24.

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| அ | குமார் | ஆள்சார் கணக்கு |
| ஆ | பெற்ற கழிவு | பெயரளவு கணக்கு |
| இ | கட்டடம் | சொத்து கணக்கு |
| ஈ | முதல் | ஆள்சார் கணக்கு |

25. ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?

- வெவ்வேறு பிழைகள் ஒன்றுக்கொன்று ஈடு செய்பவையாக அமைந்தால், அவை ஈடுசெய் பிழைகள் எனப்படும்.

26.

ப “ ------------ “ அவர்களின் தனிப்பத்தி ரொக்க ஏடு வ

| நாள் | பெறுதல்கள் | இரசீது எண் | பே.ப. எண் | தொகை ₹ | நாள் | செலுத்தல்கள் | சான்று சீட்டு எண் | பே.ப. எண் | தொகை ₹ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

27. குறிமுறை என்றால் என்ன?

- குறிமுறை என்பது ஒரு அடையாளகுறி.
- பொதுவாக கணினிமயக் கணக்கியல், கணக்குகளை குறிமுறையாக்குதலை உள்ளடக்கியதாகும்.
- எண்ணற்றக் கணக்குகள் இருக்கும் நிறுவனங்களில், கணக்குகள் குறிமுறையாக்கம் அவசியமாகின்றது.
- குழுக்களுக்கும் மற்றும் அதன் கூறுகளுக்கும் இடையே ஒரு படிநிலையான தொடர்பு இருக்கும்.
- குழுக்களுக்கும் மற்றும் அதன் துணை குழுக்களுக்கும் இடையேயான படிநிலை தொடர்பைப் பராமாரிப்பதற்காக பொருத்தமான குறிமுறையாக்கம் தேவைப்படுகின்றது.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

28. விடுபட்ட பகுதிகளை நிரப்புக

| | சொத்துகள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | ₹.30,000 | = | ₹.20,000 | + | ₹. 10,000 |
| (ஆ) | ₹.60,000 | = | ₹.25,000 | + | ₹. 35,000 |

29. விற்ற சரக்கின் அடக்கவிலை = தொடக்கசரக்கிருப்பு + கொள்முதல் + நேரடிச் செலவுகள் - இறுதிச் சரக்கிருப்பு

= 10,000 + 80,000 + 7,000 - 15,000

= 97,000 - 15,000

= ₹.82,000

30. குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது ) | | xxx | xxx |

## பகுதி - இ

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 × 3 = 21

31. கணக்கியலின் முக்கியத்துவம் பற்றி ஏதேனும் மூன்று கூறுக

1) முறையானபதிவேடுகள்
   - அனைத்து நிதிசார்ந்த நடவடிக்கைகளும் கணக்கேடுகளில், முறையாகவும், பொதுவான தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டும் தொகுக்கப் படுகின்றன.
2) நிதிநிலைஅறிக்கைகள் தயாரித்தல்
   - வருமான அறிக்கை அல்லது இறுதிக் கணக்குகளை, உரிய காலங்களில் தயாரிப்பதன் மூலம் ,வணிகத்தின் இயக்க முடிவுகளையும், நிதி நிலையையும் அறிய முடியும்.
   - இது உரிமையாளர்களுக்கு இலாபத்தை வழங்கவும், வணிகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு நிதியை அளிக்கவும் உதவுகிறது.
3) வளர்ச்சியை மதிப்பிடல்
   - வணிகத்தின் நீர்மைத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் கடன் தீர்க்கும் திறன் ஆகியவற்றின் முழுமையான நிலையினை நிர்வாகத்திற்கு கணக்கியல் அளிக்கிறது.
4) முடிவெடுக்க உதவுதல்
   - நிர்வாகம் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான, உரிய தகவல்களை கணக்கியல் அளிக்கிறது.
   - அந்தத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நிர்வாகம் உருவாக்குகிறது.



5) பயனீட்டாளர்களுக்கு தகவல் தருதல்
   - உரிமையாளர்கள், நிர்வாகம், கடனீந்தோர், பணியாளர்கள், நிதி நிறுவனங்கள், வரிவிதிப்பு அதிகாரிகள் மற்றும் அரசாங்கம் போன்ற பல்வேறு பயனீட்டாளர்களுக்கு கணக்கியல் தகவல்களைத் தருகிறது.
6) சட்டச் சான்றாக இருத்தல்
   - பொதுவாக நீதிமன்ற வழக்குகளிலும் இதர ஆணையங்களிலும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண கணக்கேட்டுப்பதிவுகள் சான்றாக ஏற்கப்படுகின்றன.
7) வரி கணக்கிடுதல்
   - வருமானவரி மற்றும் இதரவரிகள் கணக்கிடுதல் மற்றும் செலுத்தலில் கணக்கேடுகள் அடிப்படை ஆதாரமாக இருக்கின்றன.

32. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப்பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக

i) வெளித்தூக்குக் கூலி - பற்று
ii) கூலி - பற்று
iii) வாடகை பெற்றது - வரவு
iv) முதல் - வரவு
v) விற்பனை - வரவு
vi) விற்பனை திருப்பம் - பற்று

33. நீள்பயன் வருவாயினச் செலவு என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தரவும்.

- நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வருவாயினத் தன்மையுள்ள ஒரு செலவின் பயன், எதிர்வரும் ஆண்டு அல்லது ஆண்டுகளுக்கும் கிடைக்குமானால், அச்செலவு நீள்பயன் வருவாயினச் செலவு ஆகும்.

உதாரணங்கள்

1. விளம்பரத்திற்காக செய்யப்பட்ட பேரளவுத் தொகை
2. பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள்

34. கணினி அமைப்பின் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு சாதனங்களைக் குறிப்பிடுக.

1) உள்ளீட்டு சாதனங்கள்
   1. விசைப்பலகை
   2. ஒளியியல் வருடி
   3. சுட்டி
   4. இயக்குப்பிடி
   5. தொடுதிரை
   6. எழுத்தாணி
2) வெளியீட்டு சாதனங்கள்
   1. திரையகம்
   2. அச்சுப்பொறி



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

35. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.

1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பும், வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண,
2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய,
3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட,
4. வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுக்க.

36.

ராகுல் என்பவரின் ஏடுகளில்

தனிப்பத்தி ரொக்க ஏடு

ப வ

| நாள் | பெறுதல்கள் | பே.பு. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே.ப.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 மே1 | இருப்பு கீ/கொ | | 40,000 | 2017 மே 7 | கூலி க/கு | | 2,000 |
| 15 | விற்பனை க/கு | | 9,000 | 22 | சபாபதி க/கு | | 5,000 |
| | | | | 28 | சம்பளம் க/கு | | 2,500 |
| | | | | 31 | இருப்பு கீ / இ | | 39,500 |
| | | | 49,000 | | | | 49,000 |
| ஜூன் 1 | இருப்பு கீ/கொ | | 39,500 | | | | |

37. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது | அடிக்கடி நிகழும் தன்மையுடையது |
| 2 | அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும் |
| 3 | பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது | வருவாயின செலவைக் காட்டிலும், மிகுதியான வருவாயின வரவுகள், இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும் |



38.

இலாப நட்ட கணக்கு

ப வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| அலுவலக வாடகை | | 10,000 | மொத்த இலாபம் கீ/கொ | | 50,000 |
| தள்ளுபடி கொடுத்தது | | 12,000 | வட்டி பெற்றது | | 2,000 |
| விளம்பரம் | | 4,000 | | | |
| தணிக்கைக் கட்டணம் | | 1,000 | | | |
| வெளித்தூக்கு கூலி | | 2,500 | | | |
| பொதுச் செலவுகள் | | 3,000 | | | |
| நிகர இலாபம் | | 19,500 | | | |
| | | 52,000 | | | 52,000 |

39.

சுரேஷ் அவர்களின் ஏடுகளில்

கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்.வ. இ.எ | பே.ப. எ | தொகை ( ₹ ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 1 | சுமதி | | | | 17,800 |
| 10 | இரகுநாதன் | | | | 10,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 27,800 |

விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெ. செ.இ. எ | பே.ப. எ | தொகை ( ₹ ) விளக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 டிச 4 | இராணி | | | | 15,200 |
| 21 | சரண்யா | | | | 12,500 |
| | விற்பனை க/கு வ | | | | 27,700 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**40. வரவு இருப்பு மட்டுமே காட்டும் கணக்குகள்**

| | |
|---|---|
| 1 | முதல் |
| 2 | விற்பனை |
| 3 | பற்பலகடனீந்தோர் |
| 4 | கொள்முதல் திருப்பம் / வெளித்திருப்பம் |
| 5 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு |
| 6 | பெற்ற வட்டி |
| 7 | பெற்ற கழிவு / ஈட்டிய கழிவு |
| 8 | பெற்ற தள்ளுபடி |
| 9 | பெற்ற கடன் (or) கடன் ( வரவு ) |
| 10 | காப்பு நிதி |
| 11 | வங்கி மேல்வரைப் பற்று |
| 12 | வங்கிக் கடன் |
| 13 | வாராஐயக்கடன் ஒதுக்கு |
| 14 | பிற ஆதாயங்கள் மற்றும் பொறுப்புகள் |

## பகுதி – ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41 அ) **கணக்கியல் சமன்பாடு**

| வ எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | = | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | அறைகலன் | = | முதல் ₹. | கடனீந்தோர் ₹. |
| i) | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | + 80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| | சமன்பாடு | +80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| ii) | கடன் கொள்முதல் | 0 | + 10,000 | 0 | = | 0 | + 10,000 |
| | சமன்பாடு | +80,000 | + 10,000 | 0 | = | + 80,000 | + 10,000 |
| iii) | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | - 6,000 | 0 | + 6,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +74,000 | + 10,000 | + 6,000 | = | + 80,000 | + 10,000 |
| iv) | கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | - 8,000 | 0 | 0 | = | 0 | - 8,000 |
| | சமன்பாடு | +66,000 | + 10,000 | + 6,000 | = | + 80,000 | + 2,000 |
| v) | ரொக்க கொள்முதல் | - 2,000 | + 2,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +64,000 | + 12,000 | + 6,000 | = | + 80,000 | + 2,000 |
| vi) | வாடகை ரொக்கமாக செலுத்தியது | - 500 | 0 | 0 | = | - 500 | 0 |
| | சமன்பாடு | +63,500 | + 12,000 | + 6,000 | = | + 79,500 | + 2,000 |
| | சமன்பாடு | +81,500 | | | = | + 81,500 | |



**( அல்லது )**

41. ஆ) **மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஸ் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 15,000 | 15,000 |
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு<br>( கடனுக்கு விற்பனை செய்தது ) | | 10,000 | 10,000 |
| 14 | கமலேஸ் க/கு ப<br>ரொக்க க/கு<br>( கமலேசுக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 500 | 500 |



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>( ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 4,000 | 4,000 |

42. அ) குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 1 | ரொக்க க/கு ப<br>தர்மா முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 70,000 | 70,000 |
| 6 | ரொக்க க / கு ப<br>கணேசன் க / கு<br>( கணேசனிடமிருந்து பெற்ற ரொக்கம் ) | | 10,000 | 10,000 |
| 10 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 3,000 | 3,000 |
| 20 | ரொக்க க/கு ப<br>பெற்ற கழிவு க/கு<br>( ஆனந்திடமிருந்து பெற்ற கழிவு ) | | 5,000 | 5,000 |

பேரேட்டுக் கணக்குகள்

ப ரொக்க கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆகஸ் 1 | தர்மா முதல் க/கு | | 70,000 | 2017 ஆகஸ் 10 | வாடகை க/கு | | 3,000 |
| 6 | கணேசன் க/கு | | 10,000 | 31 | இருப்பு கீ/ இ | | 82,000 |
| 20 | பெற்ற கழிவு க/கு | | 5,000 | | | | |
| | | | 85,000 | | | | 85,000 |
| 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 82,000 | | | | |

ப தர்மா முதல் கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017ஆக 31 | இருப்பு கீ/ இ | | 70,000 | 2017 ஆக 1 | ரொக்க க/கு | | 70,000 |
| | | | 70,000 | | | | 70,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 70,000 |

ப கணேசன் கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 31 | இருப்பு கீ/இ | | 10,000 | 2017 ஆக 6 | ரொக்க க/கு | | 10,000 |
| | | | 10,000 | | | | 10,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/ கொ | | 10,000 |

ப வாடகை கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 10 | ரொக்க க/கு | | 3,000 | 2017 ஆக 31 | இருப்பு கீ/ இ | | 3,000 |
| | | | 3,000 | | | | 3,000 |
| 2017 செப் 1 | இருப்பு கீ/கொ | | 3,000 | | | | |

ப பெற்ற கழிவு கணக்கு வ

| நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப.எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஆக 31 | இருப்பு கீ/இ | | 5,000 | 2017 ஆக 1 | ரொக்க க/கு | | 5,000 |
| | | | 5,000 | | | | 5,000 |
| | | | | 2017 செப் 1 | இருப்பு கீ/ கொ | | 5,000 |


B.BALAJI , GHSS, PARANTHUR , KANCHIPURAM DT. 9629647613
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

( அல்லது )

42. ஆ) ரொக்கத் தள்ளுபடிக்கும் வியாபாரத் தள்ளுபடிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

| வ. எ ண் | அடிப்படை | ரொக்கத் தள்ளுபடி | வியாபார தள்ளுபடி |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | பொருளை வாங்கியவர் தொகையை முன்கூட்டி செலுத்துவதை ஊக்குவிக்கும் பொருட்டு இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. | வாங்குபவர் அதிகப்படியான எண்ணிக்கையில், பொருட்களை வாங்கும் பொருட்டு அவர்களை ஊக்குவிப்பதற்காக இத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது |
| 2 | வழங்கப்படும் காலம் | ரொக்கத் தள்ளுபடி, விற்றவர் அல்லது கடனீந்தோரால் வாங்கியவர் அல்லது கடனாளிக்கு தொகையைத் திரும்ப செலுத்தும்போது வழங்கப்படுகிறது | வியாபாரத் தள்ளுபடி, விற்றவரால் வாங்கியவருக்கு பொருட்களை விற்கும்போது வழங்கப்படுகிறது. |
| 3 | தள்ளுபடி தொகை | இத் தள்ளுபடி திரும்ப செலுத்தும் காலத்தை அடிப்படையாகக் கொண்டது. | இத் தள்ளுபடி பொருட்கள் வாங்கிய அளவினை அடிப்படையாகக் கொண்டது. |
| 4 | கணக்கேடுளில் பதிவு செய்தல் | இது, கணக்கேடுகளில் பதியப்படுகிறது | இது, கணக்கேடுகளில் பதியப்படுவது இல்லை |
| 5 | இடாப்பிலிருந்து கழித்து காட்டுதல் | இது, இடாப்பிலிருந்து கழித்துக் காட்டப்பட மாட்டாது | இது, இடாப்பிலிருந்து கழித்து காட்டப்படும். |

43.அ) **சுந்தரம் என்பவரின் ஏடுகளில்**

**முப்பத்தி ரொக்க ஏடு**

| நாள் | பெறுதல்கள் | இ. எ | பே ப எ | தொகை ₹ தள்ளுபடி | ரொக்கம் | வங்கி | நாள் | செலுத்தல்கள் | சா சீ. எ | பே ப எ | தொகை ₹ தள்ளுபடி | ரொக்கம் | வங்கி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 42,500 | 35,000 | 2017 ஜன 4 | வங்கி க/கு | | எ | | 11,500 | |
| 3 | விற்பனை க/கு | | | | 15,700 | | 21 | மகேஷ் க/கு | | | 300 | 19,700 | |
| 4 | ரொக்க க/கு | | எ | | | 11,500 | 31 | இருப்பு கீ/இ | | | | 27,000 | 48,500 |
| 19 | பங்காதாயம் பெற்றது | | | | | 2,000 | | | | | | | |
| | | | | | 58,200 | 48,500 | | | | | 300 | 58,200 | 48,500 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | | | 27,000 | 48,500 | | | | | | | |

B.BALAJI , GHSS, PARANTHUR , KANCHIPURAM DT. 9629647613

( அல்லது )

43. ஆ) **ராமசுந்தரி ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் ஆண்டிற்கான**

ப **வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 2,500 | விற்பனை | | 7,000 |
| கொள்முதல் | | 3,300 | மொத்த நட்டம் கீ/இ | | 1,500 |
| கூலி | | 2,700 | | | |
| | | 8,500 | | | 8,500 |
| மொத்த நட்டம் கீ/கொ | | 1,500 | பெற்ற தள்ளுபடி | | 2,500 |
| சம்பளம் | | 2,600 | நிகர நட்டம் | | 1,600 |
| | | 4,100 | | | 4,100 |

**ராமசுந்தரி ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 52,000 | | இயந்திரம் | | 52,000 |
| கழிக்க : நிகர நட்டம் | 1,600 | 50,400 | வங்கி ரொக்கம் | | 6,400 |
| கடனீந்தோர் | | 8,000 | | | |
| | | 58,400 | | | 58,400 |

44. அ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) சரக்கு விற்பனைவாயிலாகப் பெற்றது ₹. 75,000. | வருவாயின வரவு |
| (ii) வங்கியிடமிருந்து பெற்றக் கடன் ₹. 2,50,000. | முதலின வரவு |
| (iii) முதலீடு விற்பனைச் செய்தது ₹. 1,20,000. | முதலின வரவு |
| (iv) கழிவுப் பெற்றது ₹. 30,000. | வருவாயின வரவு |
| (v) புதிய இயந்திரம் நிறுவுவதற்கான கூலி செலுத்தியது ₹. 1,400. | முதலினச் செலவு |

( அல்லது )

B.BALAJI , GHSS, PARANTHUR , KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net

44. ஆ) 2017, மார்ச் 31 ஆம் நாளுக்குரிய

## வங்கி சரிகட்டும் பட்டியல்

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|
| ரொக்க ஏட்டின் படி இருப்பு | | 300 |
| **கூட்டுக:** | | |
| விடுத்த காசோலை, முன்னிலைப்படுத்தப்படாதது | | 4,000 |
| | | 4,300 |
| **கழிக்க:** | | |
| வைப்பு செய்த காசோலை வசூலித்து வரவு வைக்கப்படாதது | 500 | |
| வங்கியால் பிடித்தம் செய்யப்பட்ட வட்டி | 100 | |
| நிலை அறிவுறுத்தலின்படி வங்கி செலுத்திய வாடகை | 200 | 800 |
| வங்கி அறிக்கையின் படி இருப்பு | | 3,500 |

45. அ) சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே. ப.எ | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | **பிரசாத்** 100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 450 வீதம் ( 100 × ₹. 450 ) | | | 45,000 | |
| | 75 மீட்டர் வெல்வெட் துணி ஒரு மீட்டர் ₹.180 வீதம் ( 75 × ₹. 180 ) | | | 13,500 | 58,500 |
| 20 | **ஹரிராம்** 50 கட்டுகள் காடாத் துணி, கட்டு ஒன்று ₹. 730 வீதம் ( 50 × ₹. 730 ) | | | 36,500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ துணி, கட்டு ஒன்று ₹. 650 வீதம்( 80 × ₹. 650 | | | 52,000 | 88,500 |
| | கொள்முதல் க/கு ப | | | | 1,47,000 |

**குறிப்பு** : ஏப்ரல் 24 ஆம் தேதி நடவடிக்கை, ரொக்க நடவடிக்கை ஆதலால், இதில் பதியப்படவில்லை



## சந்தோஷ் ஆடையகத்தின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெளிச் செல் இடாப்பு எண் | பே. ப.எ | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 10 | **இரத்தினம்** 60 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹.490 வீதம் ( 60 × ₹. 490 ) | | | 29,400 | |
| | 50 மீட்டர் வெல்வெட் துணி, ஒரு மீட்டர் ₹. 210 வீதம் ( 50 × ₹. 210 ) | | | 10,500 | 39,900 |
| 18 | **நாதன் நிறுவனம்** 100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 510 வீதம் ( 100 × ₹. 510 ) | | | | 51,000 |
| | விற்பனை க/கு வ | | | | 90,900 |

( அல்லது )

45. ஆ) பல்வேறு வகையான கணக்கியல் மென்பொருள்களை விளக்குக

1) **ஆயத்த மென்பொருள்**
- இவை வணிக நிறுவனங்கள் வாங்கியவுடன் உபயோகப் படுத்தக்கூடிய தரப்படுத்தப்பட்ட அல்லது ஆயத்த தொகுப்புகள் ஆகும்.
- இந்தத் தொகுப்புகள், சிறிய மற்றும் பாரம்பாரிய வியாபார நிறுவனங்களால் பயன் படுத்தப்படுகின்றன.
- நிறுவுதல் மற்றும் பராமரிப்பு செலவு மிகக் குறைவு.
- Tally, Busy, Marg மற்றும் Profitbooks என்பவை,இவ்வகையிலான மென்பொருளுக்கு சில உதாரணங்களாகும்.

2) **திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்**
- பலசமயங்களில் ஆயத்தமென்பொருள், வணிக நிறுவனங்களின் தேவைகளுக்கு ஏற்ப பொருந்துவது சாத்தியமில்லை.
- இச்சூழ்நிலைகளில் திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள் வணிக நிறுவனத்தின் தேவைகள் பூர்த்தியடைவதற்கு உதவியாக இருக்கின்றன.
- திருத்தியமைக்கப்பட்ட மென்பொருளை வணிகமையத்தின் தேவைக்கு ஏற்றாற்போல் மாற்றி அமைக்கலாம்.

  **உதாரணமாக**, பணியாளர்களின் வருகையினை பதிவு செய்யும் மென்பொருளை வாடிக்கையாளாரின் தேவைக்கிணங்க, அது பணியாளர்களின் ஒரு மாதத்தின் விடுப்புகளை கணக்கிடவும் செய்திடலாம்.
- இந்தத் தொகுப்புகள் நடுத்தர அல்லது பெரும் வணிக மையங்களால் பயன்படுத்தப் படுகின்றன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

3) உருவாக்கப்பட்ட மென்பொருள்

- பெரிய வணிக மையங்கள் தங்களுக்கென்று தனிவழியான செயல்பாட்டைக் கொண்டிருக்கும்.
- பயனுடைய மேலாண்மை தகவல் முறைக்கு, சிறிய அல்லது நடுத்தர அளவிலான வணிக மையங்களிலிருந்து தேவைப்படாத, பலதரப்பட்ட மற்றும் குறிப்பிட்ட தகவல்கள், பல பயானாளிகளுக்கு அடிக்கடி தேவைப்படுகின்றன.
- அம்மாதிரியான வணிகமையங்களில், அவைகளின் செயல்பாட்டைப் பொருத்து, தேவையின் அடிப்படையிலான மென்பொருளாக, உருவாக்கப்பட்ட தொகுப்புகள் நிறுவப்படுகின்றன.

46. அ)

ராஜூவின் என்பவரின் ஏடுகளில் 31. 3. 2017 ஆம் நாளன்றைய இருப்பாய்வு

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | கை ரொக்கம் | | 5,500 | |
| 2 | பெற்ற தள்ளுபடி | | | 300 |
| 3 | கடனீந்தோர் | | | 15,000 |
| 4 | கட்டிடம் | | 50,000 | |
| 5 | தொடக்கச் சரக்கிருப்பு | | 6,000 | |
| 6 | நேரடிச் செலவுகள் | | 5,000 | |
| 7 | வெளித்தூக்கு கூலி | | 3,500 | |
| 8 | முதல் | | | 45,000 |
| 9 | கொள்முதல் | | 49,700 | |
| 10 | விற்பனை | | | 59,400 |
| | மொத்தம் | | 1,19,700 | 1,19,700 |

( அல்லது )



46. ஆ)

திருத்தியப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | அனாமத்து க/கு ப<br>விற்பனை க/கு<br>( விற்பனை ஏட்டின் கூட்டுத் தொகையில் ₹. 2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளதை திருத்தியது ) | | 2,000 | 2,000 |
| ஆ | இயந்திரம் க/கு ப<br>கொள்முதல் க/கு<br>( இயந்திரம் ₹. 3,000- க்கு வாங்கியது கொள்முதல் கணக்கில் தவறாக பற்று வைக்கப்பட்டதை திருத்தியது ) | | 3,000 | 3,000 |
| இ | அனாமத்து க/கு ப<br>மதி க/கு<br>( மதி கணக்கில் கூடுதலாக பற்று வைக்கப்பட்டதை திருத்தியது) | | 90 | 90 |
| ஈ | கொள்முதல் திருப்ப க/கு ப<br>அனாமத்து க/கு<br>(கொள்முதல் திருப்ப ஏட்டில் அதிகமாக கூட்டப்பட்டதை திருத்தியது ) | | 200 | 200 |
| உ | விற்பனை க/கு ப<br>அனாமத்து க/கு<br>( விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை அதிகமாக எடுத்து எழுதியதை திருத்தியது ) | | 100 | 100 |



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

47. அ)

| வ.எண் | விவரம் | வகைப்பாடு |
|---|---|---|
| 1 | வங்கி | ஆள்சார் கணக்கு |
| 2 | வெளி ஏற்றிச்செல் செலவு | பெயரளவு கணக்கு |
| 3 | கொள்முதல் | பெயரளவு கணக்கு |
| 4 | ஹரிஷ் | ஆள்சார் கணக்கு |
| 5 | முன்கூட்டி செலுத்திய செலவு | பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு |
| 6 | அறைகலன் | சொத்து கணக்கு |
| 7 | நற்பெயர் | சொத்து கணக்கு / புலனாகாச் சொத்து க/கு |
| 8 | விற்பனை | பெயரளவு கணக்கு |
| 9 | வட்டி பெற்றது | பெயரளவு கணக்கு |
| 10 | முதல் | ஆள்சார் கணக்கு |

( அல்லது )

47. ஆ)

விற்ற இயந்திரம் மீதான இலாபம் அல்லத்து நட்டம் கணக்கிடுதல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| கனரக வாகனத்தின் விலை | 8,00,000 |
| கழிக்க : தேய்மானம் ( 1.10.2014 முதல் 31.3.2015 வரை ) ( 8,00,000 × 15/100 × 6/12 ) | 60,000 |
| | 7,40,000 |
| கழிக்க : தேய்மானம் (1.4.2015 முதல் 31.3.2016 வரை ) ( 7,40,000 × 15/100 ) | 1,11,000 |
| | 6,29,000 |
| கழிக்க : தேய்மானம் ( 1.4.2016 முதல் 31.3.2017 வரை ) ( 6,29,000 × 15/100 ) | 94,350 |
| | 5,34,650 |
| கழிக்க: விற்ற விலை | 5,00,000 |
| விற்றதில் நட்டம் | 34,650 |

B.BALAJI , GHSS, PARANTHUR , KANCHIPURAM DT. 9629647613

www.Padasalai.Net